DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 FEBRUARY - 2025 No. 02



என் பின்னே வாருங்கள்!

ஆயரின் செய்தி
அழைத்தலின் மகிமை

அன்புள்ள சகோதர, சகோதரிகளே!

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "இறைஅழைத்தல் சிறக்க அதை சிறப்பிக்க இறைவேண்டல் செய்ய இம் மாதம் நமக்கு சிறப்பு அழைப்பு விடுத்துள்ளார். பணத்தாலும், பலத்தாலும், பதவியாலும், படிப்பாலும், அறிவாலும், அதிகாரத்தாலும், அந்தஸ்தாலும், ஆணவத்தாலும், அதட்டலாலும், உருட்டலாலும், மிரட்டலாலும் பெற முடியாதது; இருப்பவர், இல்லாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர்,வேண்டியவர், வேண்டாதவர் என்று எவரையும் தள்ளிவைக்க முடியாதது இறை அழைத்தல். இறைவனே காதல்கொண்டு தன்னை அறிந்துகொள்ளவும், தன் பணிசெய்யவும், தன்னோடு இருக்கவும் கனிவுகொண்ட அழைப்புதான் இறை அழைத்தல். இயேசு மலைமேல் ஏறி தாம் விரும்பியவர்களை தம்மிடம் வரவழைத்தார் (மாற்.3:13). "தாய் வயிற்றில் உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே 1:5) என்ற இறைவார்த்தைகளின் நிகழ்வுகள் இறைதிட்டத்தில் எவராலும் எதனாலும் கணிக்கப்பட முடியாது தவிர்த்துச் செல்லவும் இயலாது என்பதையே உணர்த்துகிறது.

ஏகாந்த இறைவனில் ஒன்றித்து ஒன்றாகிச் செல்லக் கூடியது இறை அழைத்தல். "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். அவர்களை விடுவிக்கவும் இறங்கி வந்துள்ளேன். நான் உன்னை பார்வோனிடம் அனுப்புகிறேன். நான் உன்னோடு இருப்பேன்" (வி.ப.3:7-12) என்று இறைவன் மோயிசனை அழைத்தது முதல் சவுல், தாவீது, சாலமோன் போன்ற அரசர்களையும் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியல், ஆமோஸ் போன்ற இறைவாக்கினர்களையும், புதிய ஏற்பாட்டில் மீன் பிடிப்போர், வரி வசூலிப்போர் போன்ற பாமர சீடர்களையும், கிறிஸ்தவர்களையே

அழித்தொழிப்பேன் என்று சபதமேற்ற சவுலை பவுலாக மாற்றிய இறைவனே அன்றும் இன்றும் நாளையும் இறை அழைத்தலின் சூத்திரதாரியாவார். ''நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காக தன் உயிரைக் கொடுப்பார்" (யோவா 10:11) என்ற உயிர் கொடுக்கும் இயேசுவின் சொற்களுக்கு ஏற்ப நல்ல ஆயனாக ஆடுகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும், வழிநடத்தவும், வழி தவறிய ஆடுகளை தேடிச் சென்று ஒன்று சேர்க்கவும், பசுமையான வாழ்வுக்கு வழிநடத்தவும், தேவையெனில் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கவும் இறைவன் அழைத்தலை கொடுக்கின்றார்.

நமது திருத்தந்தை அவர்கள் இறை அழைத்தலை மேன்மைபடுத்த ''எதிர் நோக்கின் விதைகளைத் தூவுவோம்; அமைதியை கட்டி எழுப்புவோம்" என்ற சிந்தனையில் செயலாற்ற நமக்கு அழைப்பு விடுத்துள்ளார். 21 ஆம் நூற்றாண்டில் பயணிக்கும் இருபால் இளைஞர்களும் எதிர்நோக்கில் பிடிமானம் குறைந்தவர்களாக அளவுக்கு அதிகமாகவும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் அதீதமாக கவரப்பட்டவர்களாகவும் வளரும்சூழலைக் காணமுடிகிறது. இத்தகைய நவீனத்துவத்தின் அதிநவீன கவர்ச்சியில் இளையோரின் உள்ளங்களிலும் எண்ணங்களிலும் விதைக்கப்படும் விதைகள் எதிர்மறை ஈர்ப்பாக முழுகவனமும் கவரப்படுகிறது. இத்தகைய சூழலில்தான் திருத்தந்தை இளையோர் உள்ளங்களில் எதிர்நோக்கின் விதைகளை தூவச் சொல்கிறார்.

அரசியல், சமூகம், சமயம், பண்பாடு, தேசியம் என்ற நிலையில் நீதிக்காக உழைப்பவர்கள், மனிதர்களை சமமாக மதிப்பவர்கள், பொது நலன்களுக்காக போராடுபவர்கள், விளிம்பு நிலையில் உள்ளவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உழைப்பவர்கள், பெண்களின் மேம்பாட்டிற்கு பாடுபடுகின்றவர்கள், இயற்கையை பாதுகாப்பவர்கள், வேலை பெருக்கத்திற்கு வழி செய்பவர்கள், அமைதியான வாழ்வுக்கு வழிகாட்டுபவர்கள் என்ற பெருங்கூட்டம் தங்கள் நற்செயல்களால் விதைகளாகும்போது

எதிர்நோக்கு இயல்பாகவே இளையோர் இதயங்களில் தளிர்விட்டு மலரத்துவங்கிவிடும். இதன் விளைவாக நம்பிக்கையும் ஈடுபாடும் நிறைந்த அமைதிநிலை இச்சமூகத்தில் நிறைந்திடும்போது இளையோரின் இதயங்களில் இறைஅழைத்தலின் கதவுகள் திறக்கப்பட்டு அமைதியின் கருவியாய் தங்களை ஆட்படுத்திக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் "விதைப்பவன் உறங்கினாலும் விதைகள் ஒருபோதும் உறங்குவதில்லை" என்ற பிடல் காஸ்ட்ரோவின் பொன்வரி திருத்தந்தையின் இறைஅழைத்தல் வேண்டுகோலுக்கு ஏற்றதாகவே உள்ளது. " விதைத்துக்கொண்டே இரு. முளைத்தால் மரம் இல்லையேல் உரம்" என்ற சேகுவேராவின் சொற்கள் இன்றைய இளையோருக்கு ஏற்றதோர் எதிர்நோக்கை கொடுக்கும் விதையாகவே உள்ளன.

இளையோர் உள்ளத்தில் சீடத்துவ பணிவாழ்வின் மகிமையையும் மேன்மையையம் தெளிவுபடுத்தும் வழிகாட்டுதல் குடும்பத்திலும், பங்குதலங்களிலும் கையாளப்படுதல் வேண்டும். திருமுழுக்கு யோவானின் சீடர்களில் இருவர் இயேசுவை பின் தொடர்ந்த போது "வந்து பாருங்கள்" என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று அவருடன் தங்க, அக அனுபவம் பெற்று தாங்கள்மட்டுமல்ல மற்றவர்களையும் அழைத்து வரும் சீடத்துவ அனுபவமாக அவர்களுக்கு அமைந்தது. (யோவா.1:38-42)

இன்றைய நவீன உலகமயமாக்கலில் குடும்பத்திலும், சமூகத்திலும் அரசியலிலும் தொழிலகத்திலும் படிப்பிடத்திலும் இளையோர் தேடுதல் முனைப்பு சாதியாலும் மதத்தாலும் அந்தஸ்தாலும் அதிகாரத்தாலும் தேடல் முனை முறிப்பு செய்யப்பட்டு புறம் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். புதிய தொழில்நுட்ப கவர்ச்சி, பெருந்தீவிர வணிக நுகர்ச் சூழல், கட்டுப்பாடு மீறிய பாலின ஈர்ப்பு, மிதமிஞ்சிய நுகர்வு மனநிலை, அனைத்தையும் அனுபவித்துவிட வேண்டும் என்ற கட்டுக்கடங்கா பேராசை, போதை மயக்கம் நிறைந்த சுற்றுச்சூழல், எதிர்கால பதட்டம், வேலையின்மை, ஒற்றைபிள்ளை

செல்லம், சவால்களை கண்டு கலக்கம், படித்துவிட்டால் நல்ல வருமானம், எப்படியாகிலும் பணம் வரவு இப்படியாக எண்ணற்ற நவீனத்துவ சூழ்நிலைகளில் இருந்து இளையோரை இறை அழைத்தலின் சவால்களிலிருந்து மீட்டெடுக்கப்பட வேண்டியுள்ளது.

பயிற்சி மையங்களும் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற மாற்றங்களுக்கு உட்படுத்திக்கொள்ளாமல் பிற்பட்ட கால பயிற்சி மையங்களாகவே உள்ளன. அழைத்தல் தேடி வந்தவர்களிலும் ஆரம்ப பயிற்சி காலத்திலேயே சாதி உணர்வும், பிராந்திய உணர்வும், மொழி உணர்வும் கலந்து விடுகின்றன. ஆடம்பரம், சுகபோகம், பொறுப்பின்மை, சோம்பல், எதையும் அதற்கென்ன என்று எடுத்துகொள்ளுதல் போக்கு, எளிதாக எடுத்துக்கொள்ளுதல், எதிர்கால கற்பனைகள், மேலைநாட்டு நாட்டம், இப்படி பற்பல தாக்குதலுக்கு அழைப்பு பெற்றவர்களும் ஆளாகி விடுகின்றார்கள்.

நிலை வாழ்வை பெற்றுகொள்ள விரும்புகிற இளைஞனிடம் இயேசு கூறியதைதான் எல்லா காலத்து இளையோருக்கும் நிலையான நிறைவான பதிலாக நாம் கூறமுடியும். "நிறை உள்ளவராக விரும்பினால் நீ போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு. அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னை பின்பற்று" (மத்.19:21). உன் ஆசா பாச தேவைகளை விட்டுவிட்டு நீ இறை அழைப்பு பெற்ற கடவுளின் சீடன் என்ற சுயத்தில் வா என்பதே கடவுளின் அழைப்பாக இருக்கிறது என்பதே நிறைவு தரும் இறை அழைப்பாகும்.

மகிழ்வில்

+ ஆயர் ஜீவானந்தம். **A**

Bishop's Programme – FEBRUARY, 2025

Date	Day	Time	Programme
27.01.2025 - 04.02.2025			CCBI / CBCI Meeting: Buvaneswar
06	Thu	10.00 a.m.	Society Meeting: Kumbakonam
07	Fri	05.00 p.m.	School Annual Day: Senthurai
08	Sat	10.00 a.m.	Convent Blessing: Annamangalam
		04.30 p.m.	Annual Day: CBSE School, Assisipuram
09	Sun	07.00 a.m.	Mass: Kalpalayam
		10.30 a.m.	Blessing of the renovated Church: Gabirelpuram
		06.00 p.m.	Mass: Ariyalur
10	Mon	06.30 p.m.	Mass: Holy Angels Convent, Kumbakonam
11	Tue		Bishop's Episcopal Ordination Anniversary: Kumbakonam
12-18	Wed-Tue		Personal Program
19	Wed	10.30 a.m.	Blessing of the School Building and Mass: St. Peter's Hr. Sec. School, Viragalur
20-21	Thu-Fri		Board Meeting : St. Peter's Seminary, Bengaluru
22	Sat	05.30 p.m.	Chapel Blessing: Konerirajapuram, Manathidal
23	Sun	10.00 a.m.	Legion of Mary: Jayankondam
24-25	Mon-Tue		Personal Program
26-27	Wed-Thu		Board Meeting: Good Shepherd Seminary, Coimbatore

BIRTHDAY

02.02.1941	Fr. R. Vincent Ferrer	Devimangalam
02.02.1957	Fr. A. Maria Francis	Papanasam
04.02.1987	Fr. J. Arul Don Bosco	Kulumur
09.02.1965	Fr. K. Kaspar	Kumbakonam
17.02.1987	Fr. I. Maria Antony James	Rome
20.02.1974	Fr. S. Chinnappan	Sikkalnayakkanpettai
22.02.1977	Fr. A. Kulandai Nathan	Purathakudi
22.02.1940	Fr. L. Vincent	Pullambadi
25.02.1977	Fr. K. Xavier	Thottiam
25.02.1978	Fr. A. Arulpragasam	Coimbatore
27.02.1972	Fr. S. M. J.Vimalan	Chennai
29.02.1968	Fr. A. Roch Alexander	Kulumur

NECROLOGY

01.02.1969	Rev. Fr. G. Arokiasamy	Kumbakonam
01.02.1983	Rev. Fr. M. Lourdes	Viragalur
02.02.1988	Rev. Fr. John of the Cross	Manathidal
02.02.1998	Rev. Fr. S. Rajarethinam	Mathur
03.02.2006	Rev. Fr. R. Antonisamy	Kumbakonam
07.02.2022	Rev. Fr. P. Sahayaraj	Kumbakonam
11.02.2016	Rev. Fr. C. Maria Joseph	Kumbakonam
15.02.1984	Rev. Fr. M. Durai	Kumbakonam
15.02.1988	Rev. Fr. S. Rayaloo	Pudukottai
18.02.2018	Rev. Fr. A. Savarimuthu	Kumbakonam

FROM THE DESK OF THE VICAR GENERAL

Your Excellency,

With immense joy we wish you a joyous 01st Anniversary of your Episcopal Ordination. We thank the Lord for his abundant blessings for your successful ministry in the diocese. We accompany you with our prayers and sincere wishes on your journey of fruitful pastoral ministry in the diocese. May the Almighty bless you with good health, peace and joy.

Assuring you of our prayers for your continual and successful Episcopal ministry,

Fraternally,

The Priests, Religious and Laity
of the Diocese of Kumbakonam.

Dear Rev. Fathers,

In view of the First Episcopal Anniversary Day of our beloved Bishop Most Rev. A. Jeevanandam, we are arranging a Seminar for Clergy cum Pontifical High Mass. The program falls as follows:

Venue	:	Diocesan Pastoral Centre, Kumbakonam
Date	:	11-02-2025
10.00 a.m.	:	Arrival
10.15 a.m.	:	Seminar on Census Prof. Bernard D.Samy and his team

11.30 a.m.	:	Felicitation – Rev. Fr. P. HenryPushparaj
11.45 a.m.	:	Eucharist in the Cathedral, Kumbakonam Homily Most Rev.F. Antonisamy, Bishop Emeritus of Kumbakonam
01.00 p.m.	:	Lunch and dispersal
6.30 p.m.	:	Feast Mass of our Lady of Lourdes by our Bishop in the Cathedral

May I kindly invite all the Diocesan and Religious priests in the Diocese to join the celebration and wish our Bishop assuring him of our prayers and support.

Cordially Inviting,
Msgr. M. Philomindas, Vicar General

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

பிப்ரவரி : குருத்துவ மற்றும் துறவற வாழ்வு இறையழைத்தலுக்காக...



கிறிஸ்துவின் திருத்தூதுப் பணியாற்றிட, குருத்துவம் மற்றும் துறவற வாழ்வில் அழைப்பை உணரும் இளையோரின் விருப்பங்களையும், சந்தேகங்களையும் திருஅவைச் சமூகம் வரவேற்க நாம் மன்றாடுவோம்.

வத்திகான் செய்திகள்

59 வது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

சமூகத்தொடர்பாளர் ''எதிர்நோக்கின் தகவல் தொடர்பாளராக'' செயல்படவேண்டும். எதிர் நோக்கு என்பது ஒரு மறைக்கப்பட்ட நற்பண்பு, அது விடாமுயற்சியும் பொறுமையும் கொண்டது.

நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து பணிவோடும் மரியாதையோடும் பகிருங்கள், (1பேதுரு 3:15-16) என்ற புனித பேதுரு அவர்களின் முதல் திருமடல் வார்த்தைகளை தலைப்பாகக் கொண்டு 59வது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான செய்தியை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தவறான தகவல்கள் மற்றும தனியார்களுக்கு சாதகமாக வளைக்கப்படும் செய்திகள் போன்றவை இன்றைய அதிகார கட்டுப்பாடுகளுக்கு மையமாக பயன்படுத்தப்படும் சூழலில், சமூகத்தொடர்பாளர்களின் பணி எவ்வளவு முக்கியத்துவம் நிறைந்தது என்பதை அறிந்து உள்ளேன் என தன் செய்தியைத் துவக்கியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு சமூகத்தொடர்பாளரும் ''எதிர்நோக்கின் தகவல் தொடர்பாளராக'' செயல்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இன்றைய உலகில் தகவல் தொடர்பு என்பது எதிர்நோக்கு என்னும் நம்பிக்கையை வழங்குவதற்குப் பதில், பயம், விரக்தி, தப்பெண்ணம், வெறுப்பு, கொள்கை வெறி மற்றும் பகைமை உணர்வுகளுக்கு வித்திடுவதாக உள்ளது எனவும் அதில் கவலையை வெளியிடும் திருத்தந்தை, தகவல் தொடர்பு என்பது வெறித்தனம் அற்றதாக இருக்க வேண்டும் என்பதற்கு அழைப்புவிடுத்து, இன்றைய தொலைக்காட்சி விவாதங்களில் இடம்பெறும் வார்த்தை தாக்குதல்கள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தைப்பொருள்களின் வியாபாரத் தந்திரத்திற்கு ஏற்ப புள்ளிவிவரங்களை வாங்கி எதார்த்தத்தைப் பற்றிய மக்களின் கருத்தை மாற்றியமைக்கும் கவனச் சிதறல் முயற்சிகளும் சமூகத்தொடர்பு சாதனங்களால் நடத்தப்படுகின்றன என்ற உண்மை நிலையை தன் செய்தியில் எடுத்துரைத்துள்ள திருத்தந்தை

பிரான்சிஸ் அவர்கள், எதிர் நோக்கு என்பது ஒரு மறைக்கப்பட்ட நற்பண்பு, அது விடாமுயற்சியும் பொறுமையும் கொண்டது என மேலும் தெரிவித்துள்ளார்.

புனித பேதுருவின் திருமடலில் எதிர்நோக்கு என்பது கிறிஸ்தவ சான்றோடும் தகவல் தொடர்போடும் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

தன் முதல் திருமடலில் புனித பேதுரு, "உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள். நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள். ஆனால், பணிவோடும் மரியாதையோடும் விடை அளியுங்கள் (3:15-16) என்று கூறுவதிலிருந்து மூன்று கருத்துக்களாக, "உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள்", நம் எதிர்நோக்குக் குறித்து விளக்கமளிக்க நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்". மேலும், "நம் பதில் பணிவோடும் மரியாதையோடும் இருக்க வேண்டும்" என்பவைகளை நம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம் என உலக சமூகத் தொடர்பு தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

கத்தோலிக்கப் பத்திரிகைத்துறையின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் தி சேல்ஸ் அவர்களின் திருவிழாவான ஜனவரி 24ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று இவ்வுலக தினச் செய்தியை வெளியிட்ட திருத்தந்தை, சமூக தகவல் தொடர்பு என்பது நம்பிக்கைளை வழங்கி உடன்பயணிகளாக நம்மை மாற்றவேண்டும். அச்சத்தை வழங்காமல் நம்பிக்கைகளை வழங்குவதாக அது இருக்க வேண்டும். சிறைகளில் வாழ்வோர், மிகவும் ஏழ்மை நிலையில் துன்புறுவோர் ஆகியோருக்குப் பணியாற்றவேண்டும் என்ற சமூகத்தொடர்புத்துறையின் கடமையையும் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்பங்கள் பெரிய அளவில் முன்னேற்றத்தைக் கண்டுவரும் இன்றைய காலக்கட்டத்தில் ஒவ்வொரு சமூகத்தொடர்பாளரும் தங்கள் உள்மனத்தை ஆராய்ந்து, தாங்கள் பணிபுரியும் மக்களின் இதயங்களுக்கு

நெருக்கமாக இருக்க வேண்டும் மற்றும் நம்பிக்கையை பரப்புவர்களாகச் செயல்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கத்தோலிக்க மரபு அறிவுத்திறனை ஒரு தெய்வீகக் கொடையாகக் கருதுகிறது!

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் சமத்துவமின்மையைக் குறைத்து அனைவருக்கும் பயனளிக்க வேண்டும். மேலும் அது மனிதாபிமான மற்றும் சமூக ஒருங்கிணைக்கப்பட்ட உலகத்தை ஊக்குவிக்க வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

கத்தோலிக்க மரபு அறிவுத்திறனை ஒரு தெய்வீகக் கொடையாகக் கருதுகிறது என்றும், மனித மாண்பு மற்றும் கடவுளின் படைப்புடன் இணைந்திருக்கும்போது அம்மரபு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தை ஆதரிக்கிறது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சுவிட்சர்லாந்திலுள்ள தாவோசு என்னும் மலை வாழிடத்தில், "நுண்ணறிவு காலத்திற்கான ஒத்துழைப்பு" என்ற கருப்பொருளில் ஜனவரி 20 ஆம் தேதி தொடங்கி நடைபெற்ற உலகக் பொருளாதார மன்ற ஆண்டுக் கூட்டத்தின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை.

செயற்கை நுண்ணறிவு என்பது, மனித நுண்ணறிவின் விளைபொருளாக, அதன் தன்னாட்சிக் கற்றல், முடிவெடுத்தல் மற்றும் உலகில் உண்மை மற்றும் மனிதகுலத்தின் பங்கு பற்றிய நெறிமுறை, சமூக மற்றும் தத்துவ கேள்விகளை எழுப்புகிறது என்பதையும் தனது உரையில் சுட்டிக்காட்டியய்யார் திருத்தந்தை.

செயற்கை நுண்ணறிவு மனித திறன்களை மேம்படுத்தும் அதேவேளையில், அது ஒழுக்கம் மற்றும் சுதந்திரத்தில் வேரூன்றிய மனித முடிவெடுத்தலை மாற்றக் கூடாது என்பதை எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, செயற்கை நுண்ணறிவு என்பது நீதி, உடன்பிறந்த உறவு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள் பொது நலனுக்காகப் பணியாற்றுகின்றனவா மற்றும் மனித மாண்பை மதிக்கின்றனவா என்பதை அரசுகள், வணிகங்கள் மற்றும் சமூகம் விமர்சனரீதியாக மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

செயற்கை நுண்ணறிவின் சவால்களை எதிர்கொள்ளவும், அனைவரின் நல்வாழ்வுக்கான அதன் திறனைப் பயன்படுத்தவும் துணை செயல்பாடு போன்ற கொள்கைகளால வழிநடத்தப்படுகின்ற ஒரு கூட்டு மற்றும் பொறுப்பான அணுகுமுறைகள் இன்றியமையாதவை என்பதையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் திருத்தந்தை.

33 ஆவது உலக நோயுற்றோர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி

பிப்ரவரி 11 செவ்வாய்க்கிழமை சிறப்பிக்கப்பட இருக்கும் 33 ஆவது உலக நோயுற்றோர் தினத்திற்கான செய்தியை சனவரி 27 திங்கள்கிழமை வெளியிட்டுள்ள திருத்தந்தை அவர்கள், எதிர்நோக்கு ஏமாற்றம் தராது நமது துன்பத்தில் அது நம்மைப் பலப்படுத்துகின்றது என்ற தலைப்பில் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நோயுற்ற காலத்தில், உடல், உளவியல் மற்றும் ஆன்மிக ரீதியாக நாம் நமது அனைத்து பலவீனங்களையும் உணரும் வேளையில், நமது துன்பங்களைப் பகிர்ந்துக்கொண்ட கடவுளின் நெருக்கத்தையும் இரக்கத்தையும் அனுபவிக்கிறோம். துன்பமும் துயரமும் வாழ்கையின் புயல்களை எதிர்கொள்ள நாம் நங்கூரமிடக்கூடிய அசைக்க முடியாத பாறை, நம்மை வலிமையாக்கும் ஒரு அனுபவம் என்று குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

10.01.2025 "மாற்றம் நோக்கி 100 இளைஞர்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் நமது மறைமாவட்டத்திலிருந்து 5 நபர்கள் கலந்துக்கொண்டார்கள்.

15.01.2025 நமது மறைமாவட்ட இளையோருக்கான மண்ணின் கலைகள் பயிற்சி மற்றும கலைநிகழ்வுகள் நடைபெற்றது.

04,05.01.2025 குழந்தை இயேசு திருத்தலம் நெ. 1 டோல்கேட், திருச்சியில் திருமண பயிற்சி கருத்தரங்கு நடைபெற்றது.

18,19.01.2025 கும்பகோணம் மறைப்பணி நிலையத்தில் திருமண பயிற்சி கருத்தரங்கு நடைபெற்றது.

பிப்ரவரி மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	பிப்ரவரி 01 மற்றும் 02 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	பிப்ரவரி 15 மற்றும் 16 சனி மற்றும் ஞாயிறு	மேய்ப்புப் பணி மையம், கும்பகோணம்

இவண்,

அருள்பணி A. ஜேம்ஸ்ராஜ்,

செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

02.01.2025 மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் மறைக்கல்வி நன்னெறி பொதுத்தேர்வு பற்றிய அறிவிப்பு கடிதம் நேரடியாகவும் தபால்வழியாகவும் அலைபேசிவழியாகவும் அனுப்பதல் பணி நடைபெற்றது.

03, 05.01.2025 வினாத்தாள்களை ஒவ்வொரு பள்ளிக்கும் எண்ணிக்கையின்படி கட்டி வைக்கும் பணி நடைபெற்றது.

06,08.01.2025 வினாத்தாள்களை மறைவட்டத்திலும் பள்ளிகளிலும் நேரடியாக கொடுக்கும் பணி நடைபெற்றது.

10.01.2025 மறைக்கல்வி மற்றும் நன்னெறி பொதுதேர்வு நடைபெற்றது. தேர்வினை மறைக்கல்வி பணிக்குழு உறுப்பினர்கள் சில பள்ளிகளில் பார்வையிட்டார்கள்.

20,31.01.2025 பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற முதல் மூன்று நபர்களின் விடைத்தாள் சரிபார்க்கும் பணி நடைபெற்றது. தலைமை ஆசிரியர்கள் கூட்டம் நடைபெறுவதற்கான ஆலோசனை செய்யப்பட்டன.

பெஸ்கி கலைக்குழு

15.01.2025 குடந்தை பேராலயப்பங்கில் நடைபெற்ற அன்பிய பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளை ஒளி-ஒலி பதிவு செய்து யூடியுப் வழியாக வெளியிடப்பட்டது.

16.01.2025 புதுக்குப்பத்தில் நடைபெற்ற திருப்பலியை ஒளி-ஒலி பதிவு செய்து மாதா டிவி தொலைக்காட்சியில் வெளியிட உதவி செய்யப்பட்டது.

தவக்காலம் 40 நாட்களிலும் தினம் 5 நிமிடம் மறையுரை செய்தி வழங்குவதற்கான திட்டமிடல் பணி நடைபெற்றது.

28,29.01.25 இரண்டு நாள்கள் மாதா தொலைக்காட்சி, சென்னை சாந்தோம் அலுவலகத்தில் AI. செயற்கை நுண்ணறிவு கருத்தரங்கு தமிழக அளவில் மறைமாவட்ட செயலர்களுக்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நமது மறைவமாவட்டம் சார்பாக அருள்தந்தை A. ராஜமாணிக்கம் அவர்கள் கலந்துக்கொண்டார்கள்.

கீ-போர்டு, பரதநாட்டிய வகுப்புகள் ஆசிரியர்கள் வழியாக தொடர்ந்து கற்றுத்தரபடுகின்றன. எனவே அருள்தந்தையர்கள் தங்கள் பங்குகளில் அறிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,
அருள்பணி A. இராஜமாணிக்கம்,
இயக்குனர், மறைப்பணி மையம்.

அன்பியம், விவிலியம் மற்றும் பொதுநிலையினர் பணிக்குழுக்கள்

04.01.2025 பொதுநிலையினர் பணிக்குழு செயலர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. மாநில அளவில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

அன்பிய மாதத்தை பல்வேறு நிகழ்ச்சிகளின் வழியாக சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும்.

21,23.01.2025 'விவிலிய பார்வையில் நமது பணிவாழ்வு' என்னும் கருப்பொருளில் கருத்தரங்கு வேளாங்கண்ணி திருத்தலத்தில் நடைபெற்றது. பல விவிலிய பேராசிரியர்கள் தங்களின் கருத்துக்களை பதிவு செய்து சிறப்பித்தனர்.

குறிப்பு: யூபிலி ஆண்டை முன்னிட்டு பொதுநிலையினருக்கான சிறப்பு கருத்தரங்கு 22.02.2025 சனிக்கிழமை அன்று நெ.1டோலகேட், குழந்தை இயேசு திருத்தலத்தில் நடைபெற உள்ளது. இலால்குடி, புள்ளம்பாடி மற்றும் பெரம்பலூர் மறைவட்டத்தில் உள்ள அனைத்துப் பங்குத்தளங்களிலிருந்தும் தலா 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் என்ற எண்ணிக்கையில் அனுப்பிவைத்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவிலிய நாள் குறிப்பேடு தேவைப்படுவோர் என்னை அணுகவும்.

இவண்,
அருள்பணி. A. பெனடிக்ட் திரவியம்,
செயலர், அன்பியம், விவிலியம் மற்றும்
பொதுநிலையினர் பணிக்குழுக்கள்.

பெண்கள் பணிக்குழு

05.01.2025 திருச்சி பிராட்டியூரில் பெண்கள் பணிக்குழு செயலர்களுக்கான பொதுக்குழு கூட்டம் மதுரை மேனாள் பேராயர் மேதகு அந்தோணி பாப்புசாமி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றதில் பணிக்குழுவின் செயலர் மற்றும் உறுப்பினர் சசிக்கலா பங்கேற்று ஜூலை முதல் டிசம்பர் 2024 வரை ஆறு மாத பணி அறிக்கை வாசித்து சமர்பிக்கப்பட்டது.

14,17.01.2025 திருப்பந்துருத்தி, சிக்கல்நாயக்கன்பேட்டை, ஸ்ரீரெங்ராஜபுரம் மற்றும் பெரும்பாலான பங்குகளில் இயக்க பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொங்கல் விழா கொண்டாடினார்கள்.

20.01.2025 குவனெல்லா நகர் பங்கு, பெருமாண்டி, சந்தனாள்புரம் பகுதியில் பெண்களையும், உடல் நலமற்றவர்களையும் சந்தித்தோம்.

22.01.2025 புள்ளம்பாடி மறைவட்ட முதன்மைகுரு பேரருள்திரு. சூசைமாணிக்கம் அவர்களை சந்தித்து புள்ளம்பாடியில் பெண்கள் தினம் கொண்டாடுவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. வந்தலை பங்கு வந்தலை கூடலூரில் பெண்கள் சந்திக்கப்பட்டார்கள்.

28.01.2025 பாபநாசம், புனித செபஸ்தியார் நடுநிலைப்பள்ளி, புனித பாஸ்ட்டின் மெட்ரிக் பள்ளி, மாணவிகளுக்கு பெண்குழந்தைகளுக்கு சுதாதாரம் பற்றிய ஒரு நாள் வகுப்பு டாக்டர் ரத்னா ராவ் MBBS., அருள்சகோதரி ஷெர்லி ஆண்டனி, DMI அவர்களால் கருத்துகள் வழங்கப்பட்டன. 300 மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

இவண்,
அருள்சகோதரி. ஷெர்லி ஆண்டனி, DMI
செயலர், பெண்கள் பணிக்குழு.

கிறிஸ்தவ ஐக்கிய பேரவை பணிக்குழு

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 6.00மணிக்கு கும்பகோணம் T.E.L.C கிறிஸ்து அரசர் ஆலயத்தில் (ஊசிமாதாகோவில்) கிறிஸ்தவ ஐக்கிய பேரவைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 12 பிற கிறிஸ்தவ சகோதர போதகர்கள் மற்றும் அச்சபையைச் சார்ந்த நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

நம் மறைமாவட்ட கிறிஸ்துவ ஐக்கிய பேரவைச் செயலர் அருள்பணி மரியசூசை அனைவரையும் வரவேற்று கடந்த ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி ஆயர் தலைமையில் கொண்டாடிய கிறிஸ்மஸ் விழா சிறப்பை விவரித்து

அனைத்து சகோதர போதகர்களையும் பாராட்டி வாழ்த்தினார். அதன் பின்னர் இனிவரும் காலங்களில் இரு மாதத்திற்கு ஒருமுறை கூடவேண்டும் என்றும் மதநல்லிணக்கத்திற்காக ஒன்றுபட்டு இணைந்து செயல்பட வேண்டும் எனவும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

இறுதியில் T.E.L.C சகோ. இன்பராஜ், பொருளாளர் நன்றி கூறினார். மூத்த போதகர் பாஸ்டர் ஞானதாஸ் AJC இறுதி செபத்தைக்கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

இவண்,

அருள்பணி. A. மரியசூசை

செயலர், கிறிஸ்தவ ஐக்கிய பேரவை பணிக்குழு

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

16.12.2024 முதல் 18.12.2024	கும்பகோணம் மறைவட்டத்தில் உள்ள திருப்பந்துறை, ரெகுநாதபுரம், கோவனூர், அருளானந்தபுரம், கொடமங்கலம், குமரமங்களம், நெல்லியடி,அம்மன்குடி, கீழதிருமலைராஜபுரம், மேலதிருமலைராஜபுரம், நாச்சியார்கோயில், வில்லியவரம்பல், எஸ்.புதூர், சிவபுரம் மற்றும் செம்போடை ஆகிய ஊர்களில் உள்ள மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் தலித் கிறித்துவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டன.
19.12.2024 முதல் 21.12.2024	ஜெயங்கொண்டம் மற்றும் மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் உள்ள தலித்கிறித்துவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு மாணவ மாணவிகள் சந்திக்கப்பட்டன.
28.12.2024	மாலை நேர வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்கு கிறிஸ்துவ பிறப்பு விழா மற்றும் புத்தாண்டு வரவேற்பு விழா செயலர்

தலைமையில் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் பேரருள்திரு. G. சோஸ்மான் ஆரோக்கியராஜ் அவர்கள் தலித் கொள்கைப் பற்றி மிகவும் சிறப்பான கருத்துரையை தொகுத்து வழங்கினார். அனைத்து ஆசிரியைகளுக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டது. இதில் 35 நபர்கள் கலந்துக்கொண்டார்கள்.

07.01.2024 கும்பகோணம் மறைவட்டத்தில் ரெகுநாதபுரம், சிந்தாலத்தூர் மற்றும் கொடமங்களம் ஆகிய ஊர்களில் தலித் கிறித்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து உழவரை வணங்கும் திருநாள் (பொங்கல்) செயலர் அருள்பணி A. இருதயராஜ் தலைமையில் சிறப்பிக்கப்பட்டது. திரு A. தமிழரசன் மற்றும் திருமதி S. சுமதி (களப்பணியாளர்) நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் மிகவும் சிறப்பான முன்னேற்பாடுகள் செய்திருந்தார்கள். திருப்பலியைத் தொடர்ந்து நடனம், கும்மி மற்றும் நாடகம் இவற்றை மக்கள் உறுப்பினர்கள் சிறப்பாக அறங்கேற்றினார்கள். விழாவின் முடிவில் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும் திருச்சி மாநிலச் செயலர் மூலம் வழங்கிய போர்வைகள், கும்பகோணம் மறைவட்டத்தில் உள்ள விதவைகள் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு திரு. A. தமிழரசன் மற்றும் திருமதி S. சுமதி அவர்கள் இல்லம் சென்று வழங்கினார்கள்.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம்
ஜனவரி - 2025

நெ.	விபரம்	தொகை
1.	**வடுகர் பேட்டை பங்கு :**	
	பங்குத்தந்தை A. ஸ்தனிஸ்லாஸ்	10,000
	திருச்சிலுவை அருள்சகோதரிகள்	5,000
	வின்சென்ட் தே பவுல்	1,000
	இறைமக்கள்	2,400
	மரியன்னை நடுநிலைப்பள்ளி	2,000
2.	**ஜெயங்கொண்டம் பங்கு :**	
	பங்குத்தந்தை S. ஜோசப் கென்னடி	34,000
3.	**கும்பகோணம் பங்கு :**	
	பங்குத்தந்தை G. கோஸ்மாஸ் ஆரோக்கியராஜ்	2,500
	பங்குப்பேரவை	3,200
	திரு. L. ஸ்டீபன் பால்ராஜ் (MLS சீவல்)	10,000
	அலங்கார் பெலிக்ஸ்	500
	திரு. சூசை அருள்	500
4.	ஆயர் இல்லம் (ஆயரின் பிறந்தநாள் பரிசு)	5,000
5.	கல்லக்குடி புனித அந்தோணியார் ஆலயம்	5,000
6.	ஏலாக்குறிச்சி பங்குத்தந்தை P. தங்கசாமி	5,000
7.	**புனல்வாசல் பங்கு :**	
	பங்கு வளர்ச்சி பணிக்குழு	2,600
	மரியாயின் சேனை	500
	அன்பிய இறைமக்கள்	1,250
8.	**வந்தலை பங்கு :**	
	பங்குதந்தை M. பிரான்சிஸ்	5,000
	அருள்சகோதரிகள் (Cluny Sisters)	5,000

	உறுதிபூசுதல் குழந்தைகள் & இளைஞர்கள்	6,301
	வந்தலை இறைமக்கள்	2,000
	காணக்கிளியநல்லூர்	1,000
	ரெட்டிமாங்குடி	500
	சிறுவயலூர்	2,000
	குளக்குடி	500
9.	பெரியவர்சீலி பங்குத்தந்தை S. சூசைநாதன்	5,000
10.	அருள்பணி M. லாரன்ஸ், ஜெர்மனி	10,000
	மொத்தம்	1,27,751

மறைப்பணி நிலையம், கும்பகோணம்



அருட்பொருளகம்

அப்பம் & இரசம்
செபமாலை
திருவிவிலியம்
செப புத்தகங்கள்
மெழுகுவர்த்திகள்
சுருபங்கள்
மோதிரம்
சாவிகொத்துகள்
கிறிஸ்துமஸ் குடில்
ஸ்டார்
தோரணங்கள்
புகைப்படங்கள் கிடைக்கும்

88836 44100

Confirmation Mass: Vandalai





KUMBAKONAM DIOCESE NEWS LETTER

Jubilee Inauguration 2025







Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112